FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

Under Section 173 BNSS (~~Under Section 154 Cr.P.C.~~)

(~~கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்~~)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8069051

1. District : Nilgiris PS: VEAC Year: 2025 FIR No.: 01/2025 Date: 01.02.2025
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 Sections பிரிவுகள்: 7.

(ii) Act சட்டம்: as amended by PC Amendment Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Act, 2018 Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை Prior to 31.01.2025 at 17.45 hrs.

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 01.02.2025 Time : நேரம் 11.30 hrs.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 01.02.2025 Time : நேரம் 11.30 hrs.

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Tamil Typed complaint.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Government Arts College

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி Junction, Udhagamandalam, the Nilgiris. at about 1 km West

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : - District : -
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Thiru. K. Srinivasan (b) Father's/ Husband's Name :
குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் Special Tahsildar Elections Collectorate, the Nilgiris (g) Address : முகவரி Special District Inspection Cell Office

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Thiru. B. Shajahan, Assistant, incharge Joint-II Sub Registrar Joint II Sub. Registrar office, Udhagamandalam, the Nilgiris

8. Reasons for delay in reporting by the complainant / Informant
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- No delay -

GCP-240-34(Type-2) 90,000 Cps.-2T.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Enclosed form - 91, Dt: 01. 02. 2025.

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet Enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஒப்புக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

K. [signature] 01/02/25

[signature] 01-02-2025

14. Signature / Thumb impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

01. 02. 2025. at 14.00 hrs.

Name: பெயர் V. Shanmuga Vadivel.
Rank: நிலை ....................No. எண் ..........
Inspector of Police
V&AC, the Nilgiris.

சமர்ப்பிக்கப்படுகிறது.

நீலகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.1/2025/AC/NI, u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-

இன்று 01.02.2025-ம் தேதி காலை சுமார் 11.30 மணிக்கு நீலகிரி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர், G.சண்முக வடிவு ஆகிய நான் அலுவலக பணியில் இருக்கும்போது நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தனி வட்டாட்சியர் (தேர்தல்கள்), பொறுப்பு சிறப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், திரு.K.சீனிவாசன் அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்ட புகாரினை பெற்று நீலகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.1/2025, u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 கீழ் வழக்கு பதிவு செய்தேன். அந்த புகார் மனு விபரம் பின்வருமாறு: அனுப்புநர் திரு.K.சீனிவாசன், தனி வட்டாட்சியர் (தேர்தல்கள்) மாவட்ட சிறப்பு ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நீலகிரி மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நீலகிரி. அம்மையீர், பொருள்: நீலகிரி மாவட்டம் - உதகமண்டலம் 2 எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் 31.01.2025-ம் தேதி 18.05 மணிமுதல் 01.02.2025-ம் தேதி 03.45 மணிவரை திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது - நடவடிக்கை எடுக்க கோருதல் - தொடர்பாக. நீலகிரி மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களால் 31.01.2025-ம் தேதி நீலகிரி சிறப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலராக நியமிக்கப்பட்ட எனக்கு உதகமண்டலம் 2 எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்திற்குட்பட்ட 1) இத்தலார், 2) உல்லத்தி, 3) எப்பநாடு, 4) கடநாடு, 5) கிண்ணக்கொரை, 6) கீழ்குந்தா, 7) தும்மனட்டி, 8) நஞ்சநாடு, 9) பாலகொலா, 10) பிக்கட்டி, 11) முள்ளிகூர் மற்றும் 12) மேல்குந்தா

பகுதிகளிலிருந்து பத்திரப்பதிவு, திருமண பதிவு மற்றும் சார்பதிவாளர் அலுவலக பணிகளுக்கு வரும் நபர்களிடம், பத்திர எழுத்தர்கள் மற்றும் பத்திர பதிவுகளை மேற்கொள்ளும் வழக்குரைஞர்கள் மூலம் உதகமண்டலம் 2 எண் இணை சார்பதிவாளர் திரு.B.ஷாஜஹான் அவர்கள் தான் செய்து கொடுக்கும் பணிகளுக்காக கையூட்டாக பணம் பெற்றும், அவற்றை வார இறுதியில் ஊருக்கு செல்லும் வழியில் மேற்படி பத்திர எழுத்தர்கள் மற்றும் வழக்குரைஞர்களிடமிருந்து பணத்தை பெற்றுக்கொண்டு செல்வதாக நம்பகமான தகவல் கிடைக்கப்பெற்றது. நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்தரவு Pdl.A1.No.30/2025 நாள்:31.01.2025-ன்படி மாவட்ட சிறப்பு ஆய்வுக்குழு அலுவலராக நியமிக்கப்பட்ட நான், நீலகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.G.சண்முக வடிவு மற்றும் காவல் குழுவினருடன் இரண்டு அரசு வாகனங்களில் உதகமண்டலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து புறப்பட்டு உதகமண்டலம் 2 எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அருகில் மாலை சுமார் 17.30 மணிக்கு கண்காணிப்பதற்காக சென்றபோது, திரு.ஷாஜஹான் அவர்கள் அவர் தங்கியிருக்கும் 1 எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றுள்ளதாகவும், அவர் தனது உடைமைகள் மற்றும் கையூட்டு பணத்தை எடுத்துக்கொண்டு தனியார் வாகனம் எண்.TN99 S7131-ல் தாராபுரம் செல்லவிருப்பதாகவும் எனக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி, 1 எண் இணை சார்பதிவாளர் அலுவலகம் சென்று கொண்டிருந்தபோது, அரசு கலைக்கல்லூரி சந்திப்பில் எதிரே வந்த மேற்படி தனியார் வாகனத்தை மாலை சுமார் 17.45 மணிக்கு காவலர்கள் உதவியுடன் சைகை காட்டி நிறுத்தினேன். நான், காவல் ஆய்வாளர் மற்றும் காவல் குழுவினர்கள் வாகனத்தில் இருந்தவர்களிடம் எங்களது அடையாள அட்டையை காண்பித்து அறிமுகம் செய்துகொண்டு, சார்பதிவாளர் திரு.ஷாஜஹான் அவர்களிடம் வாகனத்தை சோதனை செய்யவிருப்பதாக தெரிவித்தோம். பின்னர் நான் காவல் குழுவினர் உதவியுடன் வாகனத்தில் இருந்தவர்களை இறங்கச்செய்து ஒவ்வொருவரையும் தனித்தனியாக விசாரிக்க வாகன

ஓட்டுநர் தனது பெயர் M.செந்தில்குமார் என்றும், பார்ட்டியை பிக்கப் செய்துகொண்டு தாராபுரம் செல்வதாக கூறினார். அப்போது வாகனத்தின் பின் இருக்கையில் இடதுபுறம் அமர்ந்திருந்த நபர் எங்களிடம் தன் பெயர் B.ஷாஜஹான் என்றும், தான் 2 எண் இணை சார்பதிவாளராக பணிபுரிந்து வருவதாகவும், தான் அலுவல் முடித்து தாராபுரத்தில் உள்ள தனது வீட்டிற்கு சென்று கொண்டிருப்பதாகவும், மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.R.பிரபு மற்றும் தட்டச்சர் திரு.T.பசுபதி ஆகியோர்கள் மேட்டுப்பாளையம் வரை வருவதாக கூறியதால் அவர்களையும் அழைத்துக்கொண்டு சென்று கொண்டிருப்பதாக கூறினார். பின்னர் நாங்கள் திரு.ஷாஜஹான் அவர்களிடம் அவரது உடைமைகள் குறித்து கேட்க வாகனத்தின் டிக்கியில் இருப்பதாக தெரிவித்தார். அதன்படி டிக்கியை திறந்து பார்த்தபோது அதில் மூன்று பேக்குகள் இருந்தது. அந்த பேக்குகளில் ஒரு ரெக்சின் தோள்பை மற்றும் டிராவல் பேக்கை திரு.ஷாஜஹான் அவர்கள் தனக்கு சொந்தமானதென அடையாளம் காட்டினார். அந்த ரெக்சின் பேக்கை நான் சோதனை செய்தபோது, அதில் துணிகளுக்குள் பணம் கட்டுகட்டாக சுற்றப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்தது. அதில் எவ்வளவு பணம் உள்ளது என்று திரு.ஷாஜஹான் அவர்களிடம் கேட்க, அவர் சுமார் ரூ.3,00,000/-க்கு மேல் இருக்கும் என்று கூறினார். பின்னர் அந்த ரெக்சின் தோள்பையை அப்படியே மூடி வைத்தவிட்டு, திரு.ஷாஜஹானுக்கு சொந்தமான மற்றொரு டிராவல் பேகை சோதனை செய்தபோது அதில் துணிமணிகள் தவிர வேறொன்றும் இல்லாததால் வாகனத்தின் டிக்கி பாதுகாப்பாக மூடப்பட்டது. வாகனம் நிறுத்தப்பட்ட இடமானது உதகமண்டலம் அரசு கலைக்கல்லூரி சாலை சந்திப்பாகும். அந்த சந்திப்பானது பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்படும் வண்ணம் இருந்ததால், TN 99 S 7131 என்ற வாகனத்தில் வாகன ஓட்டுநர் திரு.செந்தில்குமார், அருகில் காவல் ஆய்வாளரும், பின் இருக்கையில் திரு.ஷாஜஹான் அவர்களுடன் நானும் வாகனத்தில் இருந்த உடைமைகளுடன் அங்கிருந்து 2 எண் இணை பதிவாளர் அலுவலகத்திற்கு புறப்பட்டோம். அரசு வாகனத்தில் காவல்

குழுவினருடன் திரு.பிரபு மற்றும் திரு.பசுபதி எங்களை பின் தொடர்ந்து வந்தனர். நாங்கள் அனைவரும் உதகமண்டலம் எண்.2 இணை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு மாலை சுமார் 18.00 மணிக்கு சென்றடைந்தோம். 2 எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்ததும், திரு.ஷாஜஹான் அவர்களை வாகனத்தில் உள்ள அவரது உடைமைகளை எடுத்துக்கொண்டு அலுவலகத்திற்குள் வரவழைத்து அவரது இருக்கையில் அமர வைக்கப்பட்டது. பின்னர் ஒட்டுநர் திரு.செந்தில்குமார் மற்றும் அரசு வாகனத்தில் அழைத்து வரப்பட்ட திரு.பிரபு மற்றும் திரு.பசுபதி ஆகியோர்களை அவரவர் உடைமைகளுடன் அலுவலகத்திற்குள் அழைத்து வந்து திரு.ஷாஜஹான் அவர்கள் அமர்ந்திருந்த இருக்கையின் எதிரே வடக்கு பக்கம் இருக்கை போட்டு அமர வைக்கப்பட்டது. அப்போது அலுவலகத்தில் இருந்த நபரிடம் நான் விசாரிக்க, அவர் தனது பெயர் R.யோகேஷ் என்றும், தான் 02.01.2025-ம் தேதி முதல் 2 எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் Data Entry Operator ஆக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் எங்களை அறிமுகம் செய்துகொண்டு, திடீர் ஆய்வு செய்ய வந்திருக்கும் விவரம் தெரிவிக்கப்பட்டது. இந்த திடீர் ஆய்வின்போது 18.05 மணிக்கு செயல்முறை நடவடிக்கையானது ஆரம்பிக்கப்பட்டது. நான் திரு.ஷாஜஹான் அவர்களிடம் விசாரணை செய்ய தான் உதவியாளர் நிலையில் பொறுப்பு இணை சார்பதிவாளராக 28.01.2024-ம் தேதி முதல் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். மேலும், அவர் கோவை மண்டல துணை பதிவுத்துறை தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.350/அ1/2025, நாள்:28.01.2025-ன்படி திருப்பூர் மாவட்டத்திற்கு பகராண்மை (Deputation) பணியாக மாற்றம் செய்யப்பட்டுள்ளதால், 2 எண் இணை சார்பதிவாளர் பொறுப்பு பணியிலிருந்து தான் விடுவிக்கப்பட்டதாக தெரிவித்தார். பின்னர் காவல் ஆய்வாளர் மூலம் மாவட்ட பதிவாளர் (பொறுப்பு) திரு.K.கரீம் ராஜா அவர்களுக்கு மாலை சுமார் 18.45 மணிக்கு திடீர் ஆய்வு தொடர்பாக தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன்பின்னர் திரு.ஷாஜஹான் அவர்களின் நீலம், சிவப்பு மற்றும் கருப்புநிற ரெக்சின் தோள்பை சோதனையிடப்பட்டது. அதில் 1, 2 மற்றும் 4-வது அறைகளில் எந்த பொருளும் இல்லை. மூன்றாவது

அறையில் இருந்த துணிகளில் சுற்றி கத்தை கத்தையாகவும், கவர்களிலும் வைக்கப்பட்டிருந்த பணத்தை ஒவ்வொன்றாக எடுத்து நான் எண்ணிப்பார்க்க, அதில் ஒரு காக்கி நிற கவரில் 500 ரூபாய் தாள்கள் இரண்டு கட்டுகள் இருந்தது. அவற்றை எண்ணிப்பார்க்க இரண்டு பணக்கட்டுகளிலும் தலா 100 எண்ணிக்கையில் 500 ரூபாய் தாள்கள் மொத்தம் ரூ.1,00,000/- இருந்தது. அந்த பணம் குறித்து திரு.ஷாஜஹான் அவர்களிடம் விளக்கம் கேட்க, 31.01.2025-ம் தேதி நஞ்சநாடு-1 கிராமம், முத்தோரை பாலாடாவைச் சேர்ந்த திரு.விஸ்வநாதன், த/பெ சிங்கராஜ் மற்றும் பாலகொலா கிராமம் மந்தனை சேர்ந்த திரு.திலிப்குமார், த/பெ நாச்சிமுத்து ஆகியோர்களின் கட்டிடங்களை கள ஆய்வு செய்ய சென்றபோது அவர்களுடைய வழக்குரைஞர்கள் திரு.செந்தில்குமார் மற்றும் திரு.சுரேஷ்குமார் தலா ரூ.50,000/- வீதம் கொடுத்ததாக தெரிவித்தார். பின்னர், திறந்த நிலையில் இருந்த வெள்ளை நிற கவரில் சோதனை செய்தபோது அதில் இரண்டு கட்டுகளாக 500 ரூபாய் தாள்களுடன் நான்காக மடிக்கப்பட்ட நிலையில் ஒரு துண்டு பேப்பர் இருந்தது. அந்த பணத்தை எண்ணிப்பார்க்க ஒரு பணக்கற்றில் 50 எண்ணிக்கையிலும் மற்றொரு கட்டில் 40 எண்ணிக்கையில் 500 ரூபாய் தாள்கள் என மொத்தம் ரூ.45,000/- இருந்தது. அதனுடன் இருந்த துண்டு பேப்பரில் ஒரு பக்கம் தட்டச்சு செய்யப்பட்டும், மறுபக்கத்தில் “(1) Thummanatty Building 18 cent partition - 20,000, (2) Hullathi 10½ cent sale deed - 25,000” என்றும் கருப்பு மையினால் எழுதப்பட்டிருந்தது. மேற்படி பணம் குறித்து திரு.ஷாஜஹான் அவர்களிடம் நான் விளக்கம் கேட்க, 28.01.2025-ம் தேதி பாகப்பிரிவினை ஆவணம் எண்.87/2025 மற்றும் 30.01.2025-ம் தேதி கிரைய ஆவண எண்.105/2025 பதிவு செய்ததற்காக முறையே ரூ.20,000/- மற்றும் ரூ.25,000/- அதன் உரிமையாளர்கள் கொடுத்ததாகக் கூறி பத்திர எழுத்தர் திரு.தேவன் என்பவர் 31.01.2025-ம் தேதி தான் கள ஆய்விற்கு சென்றபோது வெளியில் வைத்து தன்னிடம் கொடுத்ததாக தெரிவித்தார். மேலும், அந்த தோள்பையின் அதே அறையில் 500 ரூபாய் தாள்கள் ரப்பர் பேண்டால் சுற்றப்பட்ட ஒரு கட்டு இருந்தது. அதை எண்ணிப்பார்க்கையில் 115 எண்ணிக்கையில் 500 ரூபாய்

நோட்டுக்கள் மொத்தம் ரூ.57,500/- இருந்தது. மேலும், அது தவிர அதே அறையில் மடித்த நிலையில் தனித்தனி கத்தையாக 9 எண்ணிக்கையில் இருந்த பணத்தை எண்ணிப்பார்க்கையில் அதில் ஒரு கத்தையில் 1) 98 எண்ணிக்கையில் 500 ரூபாய் தாள்கள் என மொத்தம் ரூ.49,000/-, 2) 40 எண்ணிக்கையில் 500 ரூபாய் தாள்கள் என மொத்தம் ரூ.20,000/-, 3) 43 எண்ணிக்கையில் 500 ரூபாய் தாள்கள் என மொத்தம் ரூ.21,500/-, 4) 18 எண்ணிக்கையில் 500 ரூபாய் தாள்கள் என மொத்தம் ரூ.9,000/-, 5) 55 எண்ணிக்கையில் 500 ரூபாய் தாள்கள் என மொத்தம் ரூ.27,500/-, 6) 22 எண்ணிக்கையில் 500 ரூபாய் தாள்கள் என மொத்தம் ரூ.11,000/-, 7) 28 எண்ணிக்கையில் 500 ரூபாய் தாள்கள் என மொத்தம் ரூ.14,000/-, 8) 8 எண்ணிக்கையில் 500 ரூபாய் தாள்கள் மற்றும் 5 எண்ணிக்கையில் 200 ரூபாய் தாள்கள் என மொத்தம் ரூ.5,000/-, 9) 71 எண்ணிக்கையில் 500 ரூபாய் தாள்கள், 15 எண்ணிக்கையில் 200 ரூபாய் தாள்கள் மற்றும் 5 எண்ணிக்கையில் 100 ரூபாய் தாள்கள் என மொத்தம் ரூ.39,000/- இருந்தது. மேற்படி பணம் ரூ.2,53,500/- பற்றி திரு.ஷாஜஹான் அவர்களிடம் கேட்க, 30.01.2025 மற்றும் 31.01.2025-ம் தேதிகளில் தான் பதிவு செய்து கொடுத்த ஆவணங்களுக்காக, சொத்தை கிரையம் பெற்றவர்கள் அவர்களது பத்திர எழுத்தர் திரு.தேவன் மற்றும் வழக்குரைஞர்கள் திரு.செந்தில்குமார், திரு.சாய்பிரகாஷ், திரு.நெப்போலியன், திரு.சந்தோஷ் கல்லடா மற்றும் திரு.சுரேஷ்குமார் ஆகியோர்கள் மூலம் கொடுத்த பணம் என்று தெரிவித்ததால், திரு.ஷாஜஹான் அவர்களின் ரெக்சின் தோள்பையில் இருந்த கணக்கில் வராத மொத்த பணம் ரூ.3,98,500/- ஆவணங்களை பத்திரபதிவு செய்து கொடுத்ததற்கு கையூட்டாக பெற்ற பணமாக இருக்கக்கூடும் எனக்கருதுவதற்கு போதுமான முகாந்திரம் இருந்ததால், மேற்படி பணம், இரண்டு கவர்கள் மற்றும் ரெக்சின் தோள்பை ஆகியற்றை அந்த திடீர் ஆய்வின்போது தயார் செய்த செயல்முறை நடவடிக்கையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவரது உடைமைகள் முழுவதும் சோதனையிடப்பட்டது. பின்னர் திரு.B.ஷாஜஹான் அவர்களை சோதனை செய்தபோது அவரது வலதுபுற பின்பக்க பேண்ட்

பாக்கெட்டிலிருந்த பர்ஸை எடுத்து ஆஜர் செய்தார். அதில் 500 ரூபாய் தாள்கள் 5 எண்ணிக்கையிலும், 200 ரூபாய் தாள்கள் 2 எண்ணிக்கையிலும், ஒரு 100 ரூபாய் தாள் மற்றும் 20 ரூபாய் தாள்கள் 12 எண்ணிக்கையிலும் என மொத்தம் ரூ.3,240/- இருந்தது. அதைப்பற்றி அவரிடம் விசாரிக்க தனது செலவிற்கு வீட்டிலிருந்து வரும்போது எடுத்து வந்ததாக தெரிவித்தார். அலுவலக தனிநபர் பண இருப்பு பதிவேட்டை பார்வையிட்டதில் பணம் ரூ.3,240/- பதிவு செய்யப்பட்டிருந்ததால், அவர் கூறிய விளக்கத்தை ஏற்றுக்கொண்டு, அந்த பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அவரது இருக்கை முழுவதும் சோதனையிடப்பட்டது. பின்னர் அந்த அறையில் அமரவைக்கப்பட்டிருந்த திரு.R.பிரபு அவர்களை விசாரணை செய்தபோது, தான் நீலகிரி மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் 20.11.2024-ம் தேதி முதல் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். மேலும் 31.01.2025-ம் தேதி மாலை அலுவலாக தான் 2 எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்தபோது, திரு.ஷாஜஹான் அவர்கள் காரில் தாராபுரம் செல்வது தெரிந்ததால், அவருடன் கோவை வீரபாண்டியிலுள்ள தன்வீட்டிற்கு மேட்டுப்பாளையம் வரை செல்லலாம் என சென்றுகொண்டிருந்ததாக தெரிவித்தார். பின்னர் அவரை சோதனையிட்டதில் அவரது பேண்டின் வலது முன்பக்க பாக்கெட்டிலிருந்த பர்ஸிலிருந்து பணம் ரூ.1,500/- எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் குறித்து விசாரிக்க தான் சொந்த செலவிற்கு வைத்துள்ள பணம் என்று தெரிவித்ததால் அந்த பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர், அவர் வைத்திருந்த கருநீல நிற தோள்பையை சோதனையிடப்பட்டது. பின்னர் T.பசுபதி அவர்களிடம் விசாரிக்க, தான் மாவட்ட பதிவாளர் அலுவகத்தில் 08.02.2021-ம் தேதி முதல் தட்டச்சராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். மேலும், அவர் 31.01.2025-ம் தேதி மாலை அலுவலாக 2 எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்தபோது, திரு.ஷாஜஹான் அவர்கள் காரில் தாராபுரம் செல்வது தெரிந்ததால், அவருடன் ஈரோடு பெருந்துறையில் உள்ள தன்வீட்டிற்கு அன்னூர் வரை செல்லலாம் என்று சென்றுகொண்டிருந்ததாக தெரிவித்தார்.

பின்னர் அவரை சோதனையிட்டதில், தனது பேண்டின் வலது பின்பாக்கெட்டிலிருந்த பர்ஸிலிருந்து பணம் ரூ.1,770/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் குறித்து விசாரிக்க சொந்த செலவிற்காக வைத்துள்ளதாக கூறியதால் அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும், திரு.பசுபதி அவர்களின் தோள்பையை சோதனை செய்ய அதில் 1 கிராம் தங்க நாணயம் இருந்தது. அது குறித்து அவரிடம் விசாரிக்க, Tax Invoice No.DLEC242500012333, நாள்:03.01.2025-ன்படி MMTC-PAMP நிறுவனத்தில் தங்க நாணயம் வாங்கிய விலைப்பட்டியல் மற்றும் தனது செல்போனில் இருந்த பண பரிவர்த்தனை விவரங்களை காண்பித்தார். அந்த தங்க நாணயத்தை தனது பெண் தோழி திவ்யா என்பவருக்கு பரிசளிப்பதற்காக வாங்கி வைத்திருப்பதாக கூறினார். அவர் ஆஜர் படுத்திய ஆவணங்கள் அடிப்படையில் அவர் கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ளும்படியாக இருந்ததால், அந்த தங்க நாணயம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும், தோள் பையில் இருந்த அவரது உடைமைகளை சோதனையிடப்பட்டது. பின்னர், Data Entry Operator திரு.R.யோகேஷ் அவர்களை சோதனை செய்ய அவர் தன்னுடைய பேண்டின் வலது முன்பக்க பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.950/-ஐ எடுத்து ஆஜர் செய்து வீட்டிற்கு செலவு வாங்கிச்செல்ல கொண்டு வந்த பணம் என்று தெரிவித்தார். பின்னர் அலுவலக தனிநபர் பண இருப்பு பதிவேட்டை பார்வையிட்டபோது அவர் சொன்ன விளக்கம் ஏற்றுக்கொள்ளும்படி இருந்ததால், அந்த பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் ஓட்டுநர் M.செந்தில்குமார் என்பவரை விசாரிக்க தான் கோவையை சேர்ந்த திரு.ரோஹின்குமார் என்பவருக்கு சொந்தமான வாகன எண்.TN 99 S 7131-ஐ இரண்டு நாட்களாக ஓட்டி வருவதாக தெரிவித்தார். தனது வாகன ஓட்டுநர் உரிமம் எண்.TN20Z20050001090 என்றும், அவர் தான் சவாரி ஏற்றிக்கொண்டு ஊட்டி வந்ததாகவும், சந்தியா சூர்யா ஏஜென்ஸி மூலம் தாராபுரம் செல்ல செல்போன் மூலம் அழைப்பு வந்ததால், தான் 1 எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு மதியம் சுமார் 03.15 மணிக்கு வந்து அங்கேயே காத்திருந்ததாகவும், மாலை சுமார் 05.45 மணிக்கு அங்கிருந்து

மூன்று நபர்களை ஏற்றிக்கொண்டு தாராபுரம் செல்வதற்கு அரசு கலைக்கல்லூரி சந்திப்பு வழியாக சென்றபோது தாங்கள் என் வாகனத்தை சைகை காட்டி நிறுத்தியதாக தெரிவித்தார். திரு.செந்தில்குமார் அவர்களை சோதனை செய்ய அவர் தன்னுடைய சட்டையின் இடதுபுற பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.2,630/-ஐ எடுத்து ஆஜர் செய்து, வண்டி வாடகை பணம் என்று தெரிவித்ததால், விசாரணைக்குப்பிறகு அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அப்போது, கூடலூர் சார்பதிவாளர் திரு.M.கார்த்திக் என்பவர் 2 எண் இணை சார்பதிவாளர் அலுவலகம் வந்து, என்னிடம் அறிக்கை செய்து கொண்டார். பின்னர் காவல் ஆய்வாளர் 30.01.2025 மற்றும் 31.01.2025 ஆகிய தேதிகளில் பதிவான ஆவணங்கள் குறித்து திரு.ஷாஜஹான் அவர்களிடம் கேட்க, 1) Sale Deed - 9 (Doc No.99/2025, 100/2025, 101/2025, 102/2025, 103/2025, 104/2025, 105/2025, 106/2025, 107/2025), 2) Memorandum of Deposit of Title Deed - 2 (Doc No.108/2025, 109/2025), 3) Deed of Gift - 1 (Doc No.110/2025) 4) Deed of Receipt - 1 (Doc No.98/2025) ஆகிய 13 பத்திரங்கள் 30.01.2025-ம் தேதியும் மற்றும் 1) Sale Deed-4 (Doc No.111/2025, 112/2025, 116/2025, 117/2025), 2) Memorandum of Deposit of Title Deed -1 (Doc.No.114/2025), 3) Deed of Receipt-2 (Doc No.113/2025, 115/2025) ஆகிய 7 பத்திரங்கள் 31.01.2025-ம் தேதி பதிவு செய்யப்பட்டதாகவும், அதற்காக அரசுக்கு செலுத்த வேண்டிய தொகை முழுவதும் ஆன்லைனில் செலுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்து, 30.01.2025, 31.01.2025-ம் தேதிகளுக்கான Account “A”-ன் பிரதியை (6 பக்கங்கள்) Data Entry Operator திரு.R.யோகேஷ் மூலம் கூடலூர் சார்பதிவாளர் திரு.கார்த்திக் முன்னிலையில் இணையத்திலிருந்து பதிவிறக்கம் செய்து அதில் ஒவ்வொரு பக்கத்திலும் சார்பதிவாளர் திரு.கார்த்திக் அவர்களிடம் சான்றொப்பம் பெறப்பட்டு விசாரணைக்காக செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றப்பட்டது. மேலும், திரு.ஷாஜஹான் அவர்களிடம் 31.01.2025-ம் தேதி கள ஆய்வு மேற்கொண்ட விவரங்கள் குறித்து கேட்க, அவர் பத்திர எண். 112/2025-ன்படி பதிவு செய்யப்பட்ட நஞ்சநாடு-1 கிராமம் முத்தோரை பாலாடாவிற்கு சென்று திரு.விஸ்வநாதன்,

த/பெ சிங்கராஜ் என்பவரின் கட்டிடம் மற்றும் பத்திர எண்.117/2025-ன்படி பதிவு செய்யப்பட்ட பாலகொலா கிராமம் மந்தனை சென்று திரு.திலிப்குமார், த/பெ நாச்சிமுத்து என்பவரின் கட்டிடத்தை ஆய்வு செய்த விவரத்தை தெரிவித்தார். இந்த திடீர் சோதனையின்போது 1) 2 எண் இணை சார்பதிவகம் உதகை தொகுதி எண்.57 வருகைப்பதிவேடு ஆரம்பம் 02.01.2025 (6 பக்கங்கள்), 2) 2 எண் இணை சார்பதிவகம் உதகை தொகுதி எண்.8 TCS வருகைப் பதிவேடு ஆரம்பம் 02.01.2025 (4 பக்கங்கள்), 3) 2 எண் இணை சார்பதிவகம் உதகை தொகுதி எண்.13 தனி நபர் பண இருப்பு பதிவேடு ஆரம்பம் 02.01.2025 மற்றும் 4) 2 எண் இணை சார்பதிவகம் உதகை தொகுதி எண்.51 இயக்கப்பதிவேடு ஆரம்பம் 02.01.2025 ஆகியவற்றை பார்வையிட்டதற்கு அடையாளமாக அவற்றில் நானும், காவல் ஆய்வாளரும் சம்மந்தப்பட்ட பக்கங்களில் கையொப்பம் செய்து, அவற்றின் ஒளி நகல்கள் எடுத்து சார்பதிவாளர் திரு.கார்த்திக் அவர்களிடம் சான்றொப்பம் பெற்று விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் 30.01.2025, 31.01.2025-ம் தேதிகளுக்கான Account "D"-ன் பிரதியை (4 பக்கங்கள்) Data Entry Operator திரு.R.யோகேஷ் மூலம் கூடலூர் சார்பதிவாளர் திரு.கார்த்திக் முன்னிலையில் இணையத்திலிருந்து பதிவிறக்கம் செய்து அதில் ஒவ்வொரு பக்கத்திலும் சார்பதிவாளர் திரு.கார்த்திக் அவர்களிடம் சான்றொப்பம் பெற்று விசாரணைக்காக செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றப்பட்டது. நான் திரு.B.ஷாஜஹான் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். திடீர் ஆய்வானது 31.01.2025-ம் தேதி 18.05 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 01.02.2025-ம் தேதி 03.45 மணிக்கு முடிக்கப்பட்டது. திடீர் ஆய்வின்போது தயார் செய்த செயல்முறை நடவடிக்கைகள், கைப்பற்றப்பட்ட பணம் ரூ.3,98,500/-, ஆவணங்கள் மற்றும் திரு.B.ஷாஜஹான் வாக்குமூலம் இத்துடன் இணைத்துள்ளேன். உதகமண்டலம் 2 எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு பத்திரப்பதிவு, திருமண பதிவு மற்றும் சார்பதிவாளர் அலுவலக பணிகளுக்கு வரும் நபர்களிடம், பத்திர எழுத்தர்கள் மற்றும் வழக்குரைஞர்கள் மூலம் பணம் ரூ3,98,500/- கையூட்டாக பெற்ற

உதகமண்டலம் 2 எண் இணை சார்பதிவாளர் திரு.B.ஷாஜஹான் அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். ஒப்பம். K.சீனிவாசன், உதகமண்டலம், 01.02.2025. Submitted: I have received the complaint on 01.02.2025 at about 11.30 hrs from Tr.K.Srinivasan, Special Tahsildar (Elections), Special District Inspection Cell Officer, District Collectorate, Udhagamandalam and registered a case in Nilgiris Vigilance and Anti-Corruption Cr.No.1/2025 u/s. 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 at about 12.00 hrs ஒப்பம் G.Shanmuga Vadivu 01.02.2025 Inspector of Police, Vigilance and Anti-Corruption, The Nilgiris. முதல் தகவல் அறிக்கையின் அசல், அசல் புகார், அசல் செயல்முறை நடவடிக்கைகள் மற்றும் படிவம் 91 மூலமாக கைப்பற்றப்பட்ட பணம் ரூ.3,98,500/- ஆகியவற்றை கனம் தலைமை நீதித்துறை நடுவர், தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், உதகமண்டலம் அவர்களுக்கு அனுப்பிவைத்தும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தேன்.

G.Shanmuga Vadivu
IWS
01-02-2025

Inspector of police
Vigilance and Anti Corruption
The Nilgiris